முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்க நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.02.2023, வியாழக்கிழமை

1. தருமசிந்தை உலகோர் கொண்டு
   தருமவானாய் வாழ வேண்டி
   தருமபலமாக வந்த ஞானியே
   தவமெல்லாம் தருமசக்தி ஆக்கி
2. ஆக்கியே அருளும் அரங்கனே
   அப்பனே உன் பெருமை கூறி
   தக்கதொரு சுபகிருது சால் திங்கள்
   தாமுரைக்க சதுர்திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 4ம் நாள், 16.02.2023 வியாழக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசியை
   வழங்குவேன் கழற்சிங்க நாயனாரும்
   சோரமின்றி நல்லுலகம் ஆக
   சுத்த சைவ நெறிதனை ஏற்று
4. ஏற்றுப் பேருலக மக்கள்
   இணைந்து அரங்கன் தலைமை
   ஏற்று அன்னதான சேவையை
   எல்லாத் திக்கிலும் செய்து
5. செய்துமே என்றும் தயவு
   சிந்தையில் நிலைக்க சேவை
   அய்யமறச் செய்து தேறி
   அரங்கன் அவதாரம் உலகறிய
6. உலகறிய சேவை ஆற்றிட
   உண்மைபட எங்கும் தருமவான்
   உலகமெல்லாம் பரவியே
   உயிர்கொலை நீக்கி வாழும்
7. வாழும் மேல்நிலை பெருகி
   வல்லமைபட அரங்கன் பலம்
   நாளும் நாளும் உலகோர்க்கு பெருகி
   ஞானவான்களாக எங்கும் நிரம்பி
8. நிரம்பியே கலிதனில் உள்ள
   நிலைமைகள் எதிர்மறைகள்
   வரம்பிலா தீவினைகளெல்லாம்
   வருமுலகில் முழுமைபட விலகி
9. விலகிப் பெருமாற்றம் ஆக
   வினவிடுவேன் அமைதி நிலை
   கலகம் ஊழல் வஞ்சமிலா
   கடமை மீறும் நிலைகள் இல்லா

10. நிலையிலா சர்வ பாதுகாப்பு
நீதிமான்கள் ஆளுமையாகி
சலனமற எல்லா மக்களுக்கும்
சாதகமாய் வாழ்வாதார பங்கமிலா

11. பங்கமிலா ஞான ஆட்சி
பழுதில்லா ஞான ஆட்சி
இங்கனமே அரங்கனால் தேறி
எல்லா மேன்மையும் உலகு காணும்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–